திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Muruga Worship in Sangha Literature

Dr. S. Shanthi

Assistant professor, Department of Tamil, Vels Institute of Science and Technology, Chennai, India

Manuscript ID : **MT127A0052**

Volume : **2**

Issue : **3**

Month : **September**

Year : **2022**

Received: 22.09.2022
Revised: 24.09.2022
Accepted: 26.09.2022
Published: 30.09.2022

Pages : 190-196

DOI: 10.5281/zenodo.7372113

ABSTRACT:

Although there are various religions in the society, their purpose is to make people live morally. Servants who have devotion to God have composed many books promoting God's faith. Palantamil literature has given importance not only to love and heroism but also to worship and especially to Muruga worship. They confirm that Muruga worship has been in existence since ancient times in Tamil Nadu. It also reveals that Muruga worship was intertwined with Palandamizhar life. This study reveals that Murugan was regarded as the supreme god of the Tamils and that Palandamili literature took the name of Murugan and his glory and splendor as its subject matter in several places.

KEYWORDS:

Sangam Literature, Religion, Muruga Worship, Specialties

சங்க இலக்கியத்தில் முருக வழிபாடு

முனைவர் சு. சாந்தி,
உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்,
சென்னை, இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

சமுதாயத்தில் பல்வேறு சமயங்கள் இருந்தாலும் அவற்றின் நோக்கம் மனிதர்களை நெறியோடு வாழவைப்பதேயாகும். இறை மீது பக்தி கொண்ட அடியார்கள் இறை நம்பிக்கையை முன்னிறுத்தி நூல்களை பல இயற்றியுள்ளார்கள். பழந்தமிழ் இலக்கியங்கள் காதலுக்கும் வீரத்திற்கும் மட்டும் முக்கியத்துவம் தராமல் வழிபாட்டிற்கும் குறிப்பாக முருகவழிபாட்டுக்கும் முக்கியத்துவம் அளித்துள்ளன. முருகவழிபாடானது தமிழகத்தில் தொன்றுதொட்டு இருந்து வந்ததை உறுதிப்படுத்துகின்றன. மேலும், முருக வழிபாடு பழந்தமிழர் வாழ்வியலோடு பின்னிப்பிணைந்திருந்தது என்பதையும் வெளிப்படுத்துகிறது. இந்த ஆய்வானது முருகன் தமிழர்களின் தனிப்பெருங் கடவுளாகக் கருதப்பட்டான் என்பதையும், பழந்தமிழ் இலக்கியங்கள் முருகனுடைய நாமத்தையும் அவனுடைய பெருமை மற்றும் சிறப்பையும் தனக்குரிய பாடு பொருளாகப் பல இடங்களில் பெற்றுள்ளன என்பதையும் வெளிப்படுத்துகிறது.

கருச்சொற்கள்

சங்க இலக்கியம், சமயம், முருக வழிபாடு, சிறப்புகள்

முன்னுரை

செம்மொழியாய் அங்கீகரிக்கப்பட்ட தமிழ்மொழியானது தன்னிடத்தே பல்வேறு பரிமாணங்களைக் கொண்டுள்ளது. அவற்றுள் ஆன்மீகமும் இறைவழிபாடும் ஒன்று. அறுவகைச் சமயக் கடவுள்களின் பெருமைகளைப் பகரும் சங்கம் முதல் நவீன காலம் ஈறாக ஏராளமான தமிழ் இலக்கியங்கள் செந்தமிழ் கடவுள் என போற்றப்படும் முருகன் பற்றியச் செய்திகளை அதிகமாகக் கொண்டுள்ளன. இவ்விலக்கியங்களில் குறிப்பாக பழந்தமிழ் இலக்கியங்களில் காணலாகும் முருகனின் நாமம், பெருமை, வழிபாட்டு முறை போன்றவை குறித்த கருத்துக்களை வெளிக்கொண்டுவரும் விதமாக இக்கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.

குறிஞ்சி நிலமும் முருகனும்

மனித வாழ்வு முதன் முதலில் தொடங்கப்பட்ட இடம் குறிஞ்சி நிலம் என்பது அறிஞர்களின் கருத்தாகும். இயற்கை எழிலையும், வனப்பையும் கொண்டது குறிஞ்சிப்பகுதி. இதனை இறைபொருளாக உணர்ந்த பண்டைத்தமிழர் அதற்கு முருகு எனப்பெயரிட்டு மகிழ்வு கொண்டனர். முருகு என்னும் சொல் அழகு, இளமை, தெய்வநலம், மணம் என்னும் பொருள்களைக் குறிக்கும். இந்த அடிப்படையில் முருகு என்னும் பெயரோடு அன் விகுதி சேர்த்து முருகன் என்னும் திருப்பெயரால் குறிஞ்சி நிலக்கடவுளைப் போற்றி வழிபடலாயினர். சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவராகிய தொல்காப்பியர்,

"சேயோன் மேய மைவரை உலகம்" (தொல்.அகத்திணை.5)

என்ற வரி மூலம் மலை நிலத்திற்குரிய கடவுளாக சேயோன் என்ற முருகனை குறிப்பிட்டுள்ளார். முருகனைக் குறிஞ்சிக் கிழவன், மலைகிழவோன் என்று தமிழ் நூல்கள் குறிப்பிடுகின்றன. முருகன் என்னும் திருப்பெயர், முருகையுடையவன், அழகையுடையவன் என்று பொருள்படுவதாகும். முருகனுக்கு குறிஞ்சி நிலத்தைக் குறிப்பிடுவது போல குறிஞ்சி மலரை முருகனுக்குரிய மலராக தமிழ் மக்கள் குறிப்பிடுகின்றனர். குறிஞ்சி மலரோடு காந்தள் மற்றும் கடம்ப மலரினையும் முருகனுக்குரியவை என இலக்கியங்கள் தெரிவிக்கின்றன.

முருகனின் திருநாமம்

இளமை மற்றும் அழகு ஆகிய பண்புகளின் உருவகமாய் விளங்கும் முருகனின் திருநாமத்தினை சங்க இலக்கியங்கள் கீழ்க்கண்ட பாடல்களில் கொண்டுள்ளது சிறப்புக்குரியதாகும்.

"முருகன் நற் போர்நெடு வேள் ஆவி" **அகநானூறு** (1:3)

"சினம் மிகு முருகன் தண் பரங்குன்றத்து" **அகநானூறு** (59:11)

"முருகன் ஆர்அணங்கு என்றலின், அது சொத்து" **அகநானூறு** (98:10)

"செல்வன் பெரும் பெயர்ஏத்தி, வேலன்
வெறி அயர்வியன் களம் பொறப, வல்லோன்" **அகநானூறு** (98:18-19)

"பெரும் பெயர்முருக! நிற் பயந்த ஞான்றே" **பரிபாடல்** (5:50)

"கேட்டதும் பாணி எழுதும் கிணை முருகன்
தாள் தொழு தண் பரங்குன்று!" **பரிபாடல்** (8:81)

"முருகற் சீற்றத் துருகெழு குருசில்" **பொருநராற்றுப்படை** (131)

"அணங்குஉடை முருகன் கோட்டத்து" **புறநானூறு** (299:6)

"சூர்நவை, முருகன் சுற்றத்து அன்ன, நின்" **புறநானூறு** (23:4)

"அரும் பெறல் மரபில் பெரும்பெயர்முருக!" திருமுருகாற்றுப்படை (269)

இவற்றோடு ஐங்குறுநூறின் 25ஆவது பத்தான வெறிப்பத்தும், பரிபாடலின் 5 ஆவது பாடல் தொகுப்பான பாயிரும்பனிக்கடல் பகுதியும், திருமுருகாற்றுப்படை நூலும் செவ்வேளான முருகனின் திருநாமத்தினை தெரிவிக்கிறது. இவற்றோடு சேய், சேயோம் செவ்வேள், சிவந்தவன், சேந்தன், வேலன் போன்ற பெயர்களும் இவ்விலக்கியங்களில் பயின்று வந்துள்ளன.

முருகப்பெருமான் செந்நிறத்தவர், செவ்வடிவினர், செம்பவளம் போல் சிவந்த மேனியர், குன்றி மணியினைப் போலச் சிவந்த ஆடையுடையவர், மலையைத் தம் வேலினால் பிளந்து, அஞ்ஞான இருளாம் சூரனை மாய்த்து இவ்வுலக மக்கள் பாதுகாப்பாகவும் மகிழ்வோடும் வாழ உதவியவர். இதனைப் பெருந்தேவனார் குறுந்தொகையில் கீழ்கண்டவாறு போற்றிப் பாடுகின்றார்.

"தாமரை புரையங் காமர் சேவடி
பவழத் தன்ன மேனித் திகழொளிக்
குன்றி யேய்க்கும் உடுக்கைக் குன்றின்
நெஞ்சுபக வெறிந்த ஆஞ்சுடர் நெடுவேற்
சேவலன் கொடியோன் காப்ப
ஏம வைகல் எய்தின்றால் உலகே" **(குறுந்தொகை,** 61)

தோகை மயில் மீது சிவந்த ஒளிமிக்க மேனியுடன் தோன்றும் முருகனின் தோற்றத்திற்கு, உலகம் எல்லாம் மகிழ காலையில் நீலக்கடல் அலைகளின் மீது எழும் செங்கதிரோனின் தோற்றத்தை உவமையாகக்கூறி நக்கீரர் முருகப் பெருமானின் அருட் பெருமை பேசும் திருவருள் நூலாகிய திருமுருகாற்றுப்படையைத் தொடங்குவதிலிருந்து முருகனின் சிறப்பையும் நாமத்தையும் நம்மால் அறியமுடிகிறது.

"உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புள் ஞாயிறு கடற்கண் டாங்கு
ஓவற இமைக்கும் சேண்விளங் கவிரொளி" (திருமுருகாற்றுப்படை (1-3)

முருக வழிபாடு

பழந்தமிழகத்தில் முருகன் பெயரால் செய்யப்பட்டு வந்த பூசைகளில் வெறியாடல் என்பதும் ஒன்று. இது தொல்காப்பியர் காலத்தில் தொடங்கி சமய மறுமலர்ச்சி காலமான கி.பி. 7, 8ம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் நடந்து வந்தது.

> **“வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்**
> **வெறியாட் டயர்ந்த காந்தளும்”** **(தொல், புறத்**, 5)

எனத் தொல்காப்பியர் தமது இலக்கண நூலில் சுட்டும் அளவுக்கு வெறியாடல் அந்நாளில் செல்வாக்குப் பெற்றிருந்தது. அக்கால மக்களின் தெய்வ நம்பிக்கையைக் குறிக்கும் ஓர் செயலாக வெறியாடல் அமைந்துள்ளது. வேலைக் கையில் தாங்கி பூசாரி தெய்வ ஆவேசம் வரப்பெற்று, வெறியாடும் போது செக்கச் சிவந்த காந்தள் மலரைச் சூடி ஆடுவதால் வெறியாட்டயர்ந்த காந்தன் எனத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.

அன்றைய நாள் முருகன் கோயில்கள் மலைகளிலும், மலைசார்ந்த இடங்களிலும், சோலைகளுக்கு இடையேயும் அமைக்கப்பட்டிருந்தன. குறிஞ்சி நில மக்கள் உட்பட பழந்தமிழர்தங்கள் குறைதீரவும் தங்கள் நலம் மற்றும் வளத்திற்காகவும் கட்டுக்குறிகேட்டதையும், கழங்கு குறிபார்த்ததையும், குறமகள் ஆடித் தெய்வாவேசம் பெற்றதையும், பலிகொடுத்து குரவைக் கூத்தாடி முருகனை வழிபட்ட செய்தியையும், வெறியாட்டு முறையில் வேலனை வணங்கிய முறையையும் செவ்விய இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

குறிஞ்சி நிலத் தலைவி ஒருத்தி தலைவன் மீது கொண்ட காதலால் நலிவுற்று உடல்மெலிந்ததால், அத்தலைவியின் தாய் முருகன் கோயில் பூசாரியாகிய வேலன் எனப்படும் படிமத்தானை அழைத்து, தலைவியின் நோய்க்குரிய காரணத்தினைக் கேட்க, அவ்வேலன் வெறியாட்டு எடுக்கின்றான், வெறியாடும் பொழுது கழற்காயினை மெய்யில் அணிந்து, படிமக்கலத்தைத் தூக்கிக் கொண்டு முருகணங்கின் குறையெனக் கூறுகின்றான். இதை பின்வரும் ஐங்குறுநூற்றுப் பாடல் விளக்குகிறது.

> **“பொய்யா மரபின் ஊர்முது வேலன்**
> **கழங்குமெய்ப் படுத்துக் கன்னித் தூக்கி**
> **முருகென மொழியும்”** **(ஐங்குறுநூறு** (17)

வேலன் வெறியாட்டில், வேலன் என்கின்ற பூசாரி பழமையான தமிழ் முறையில் குறிஞ்சி மலரைச் சூடிக்கொண்டு முருகனை வழிபட்டதை இலக்கியங்கள்

குறிப்பிடுகின்றன. இதனைப் பற்றிக் குறிப்பிடும் போது பெண்ணொருவள் துணங்கைக்கூத்து? ஆடியதாகவும், தலைமயிர் சாய்ந்தும், வாய் திறந்தும், விழிகள் கோபத்தால் சுழன்றும் வெறியாட்டு ஆடியதாகக் குறிப்பிடுகின்றது. முருக வழிபாட்டில் வெறியாடல் என்பது போற்றத்தக்க ஒன்றார் காணப்படுகின்றது. தமிழ்நாட்டில் முருக வணக்கத்திற்குத் தோற்றமாயிருந்தது வேலன் வெறியாடல். அது ஒரு இனக்குழு வழிபாட்டு முறையாகும் என வானமாமலை குறிப்பிடுவார்.

சங்க காலத்தில் குழல் அகவவும், யாழ் முரலவும், முழவு அதிரவும், முரசு இயம்பவும் முருக வழிபாடு ஆரவாரத்தோடு நிகழ்ந்ததாக கடியலூர் உருத்திரங் கண்ணனார் கீழ்க்கண்டபாடலில் கூறுகின்றார்.

"செறிதொடி முன்னர்க் கூப்பிச் செவ்வேள்
வெறியாடு மகளிரொடு செறியத் தா அய்க்
குழலகவ யாழ்முரல
முழவதிர முரசியம்ப
விழவறா வியலாவணத்து" **(பட்டினப்பாலை, 261)**

குறிஞ்சி மக்களின் வழிபாட்டை நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் பின்வரும் பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

"சிறுதினை மலரொடு விரைஇ மறியறுத்து
வாரணக் கொடியொடு வயிற்பட் நிறீஇ
ஊர்கொண்ட சீர்கெழு விழவினும்
ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும்
வேலன் தைஇய வெறியயர் களனும்
காடுங் காவுங் கவின்பெறு துருத்தியும்
யாறுங் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமுஞ் சந்தியும் புதுப்புங் கடம்பம்
மன்றமும் பொதியிலும் கற்துடை நிலையினும்
ஆண்டலைக் கொடியொடு மண்ணியமைவர

---"

திருமுருகாற்றுப்படை, (218-250)

சிறுதிணை மலரொடு கலந்து ஆட்டுக் குட்டியினை அறுத்து கோழிக் கொடியுடன் முருகனை அவ்விடத்தில் நிறுத்தி ஊர்தோறும் விழாவெடுத்து வெறியாடும் களத்திலும், காட்டிலும், சோலைகளிலும், வேறுபல இடங்களிலும், நாற்சந்தியிலும், முச்சந்தி,

ஐஞ்சந்திகளிலும், புதுமையாகிய பூஞ்சோலைகளிலும், மன்றங்களிலும், அம்பலத்திலும் முருகனை எழுந்தருளச் செய்து கோழிக் கொடியுடன் அலங்கரித்து நெய்யோடு கடுகினை நெற்றியில் அப்பி நான்கு விரலை மடக்கி உள்ளொன்றும், வெளியொன்றும் இரண்டு உடைகளை உடுத்தி கையில் சிவந்த நூலால் காப்புக்கட்டி வெண்பொறி தூவி மற்றும் வலிமை பொருந்திய கடாவினை அறுத்து அதன் குருதியுள் செவலா கலந்து, சிறிய மஞ்சள் நீருடன் சந்தனம் தெளித்து நல்ல மலர்மாலைகளைத் தூக்கி, குறிஞ்சி நிலத்தை வாழ்த்தி நறுமணத் தூபம் காட்டி, மலை நாட்டிற்குரிய குறிஞ்சிப் பண்ணைப்பாடி முழங்குகின்ற வெவ்வேறு இசைக்கருவிகளை இசைத்து முருகனை ஆடுகளத்தில் எழுந்தருளி வரும்படி துதித்து. கொப்பு, பறை முதலிய வாத்தியங்கள் இசைத்து, முருகன் இடத்தில் தமக்கு வேண்டிய நலங்களை எல்லாம் பெற்றனர். இம்முறை வழிபாட்டையே குறிஞ்சி மக்கள் பின்பற்றினர் என்பதை திருமுருகாற்றுப்படையில் அழகுடன் விளக்கப்பட்டிருப்பதைக் காண முடிகின்றது.

முருக வழிபாட்டில் உருவ வழிபாட்டிற்கு மாறாக வேல் வழிபாடும் வழக்கில் இருந்து வருகின்றது. ஆரம்ப கால முருக வழிபாட்டில் வேலே முக்கியப் பங்கு பெற்றது. இதற்கான சான்று இலக்கியங்களில் இருந்தே கிடைக்கிறது. செருவேல், வெல்வேலான், போன்ற சொற்களை இங்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். வேல் முருகனின் ஆயுதமாகக் குறிக்கப்படுகிறது. இன்றும் நாட்டுப்புறங்களில் வேல் வழிபாடு வழக்கில் காணப்படுகிறது.

முடிவுரை

பழந்தமிழ் இலக்கியங்கள் காதலுக்கும் வீரத்திற்கும் மட்டும் முக்கியத்துவம் தராமல் வழிபாட்டிற்கும் குறிப்பாக முருகவழிபாடு குறித்த பதிவுகளுக்கும் முக்கியத்துவம் அளித்துள்ளன. இவ்விலக்கியங்களின் பதிவுகள் முருகவழிபாடானது தமிழகத்தில் தொன்றுதொட்டு இருந்து வந்ததை உறுதிப்படுத்துகின்றன. மேலும், முருக வழிபாடு பழந்தமிழர்வாழ்வியலோடு பின்னிப்பிணைந்திருந்தது என்பதையும் வெளிப்படுத்துகிறது. இந்த ஆய்வானது முருகன் தமிழர்களின் தனிப்பெருங் கடவுளாகக் கருதப்பட்டான் என்பதையும், பழந்தமிழ் இலக்கியங்கள் முருகனுடைய நாமத்தையும் அவனுடைய பெருமை மற்றும் சிறப்பையும் தனக்குரிய பாடு பொருளாகப் பல இடங்களில் பெற்றுள்ளன என்பதையும் வெளிப்படுத்துகிறது.

துணைநூற்பட்டியல்

1. சுப்பிரமணியன்,ச.வே. தொல்காப்பியம் தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
2. மாணிக்கனார், அ. அகநானூறு மூலமும் உரையும், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.1999.

3. பாலசுப்பிரமணியன், கு.வே. புறநானூறு (தொகுதி-1), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை. 2004.
4. மாணிக்கனார், அ. ஐங்குறுநூறு மூலமும் உரையும், வர்த்தமானர் பதிப்பகம், சென்னை.1999.
5. சாமிநாதையர்,உ.வே, குறுந்தொகை மூலமும் உரையும், உ. வே .சா நூல் நிலையம், சென்னை.2009
6. சாமிநாதையர், உ. வே (ப.ஆ), பரிபாடல் மூலமும் பரிமேலழகர் உரையும், உ. வே. சா நூல் நிலையம், சென்னை.2010.
7. அருணாசலம்,ப. பக்தி இலக்கியம், முல்லை நிலையம் ,சென்னை 2002.
8. வேங்கடசாமி,சீனி, சமயங்கள் வளர்த்த தமிழ், நாம் தமிழர் பதிப்பகம், சென்னை.2012.

REFERENCES

1. Subramanian,S.V. Tolkappiyam Gallurai, Manivasakar Publishing House, Chennai.
2. Manikanar, A. Akananoor source and text, Varthamanan Publishing House, Chennai.1999.
3. Balasubramanian, G.V. Purananoor (Volume-1), New Century Book House, Chennai. 2004.
4. Manikanar, A. Five Hundred Sources and Texts, Varthamanar Publishing House, Chennai.1999.
5. Saminathayar, U.V., Source and text of the book, U. Way .sa Library, Chennai.2009
6. Saminathayar, U. Ve (P.A.), Paribadal source and Parimelazhaka text, U. Way. Saw Press, Chennai.2010.
7. Arunachalam, p. Bhakti Literature, Mullai Station, Chennai 2002.
8. Venkatasamy, Seeni, Samayagal Vakartha Tamil, Nam Tamilar Publishing House, Chennai.2012.